2018 ஜூலை 3]

மையம், சுவாமிமலையில் சிற்ப கலைக்கூடம் ஆரம்பிக்கிறோம். கண்டிப்பாக கன்னியாகுமரியில் தமிழ் பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு extension centre உருவாக்குவதற்கு கருத்துரு தயார் செய்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்சென்று, வெகுவிரைவில் நல்ல முடிவு அறிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

மாணவியர் விடுதி

***4255—திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், தமிழ்நாட்டின் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களையும் வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி சட்டப் பேரவை உறுப்பினர், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல

மாணவியர் விடுதி அமைக்க அரசு முன்வருமா என்ற வினாவினை எழுப்பியுள்ளார்.

(அ) மற்றும் (ஆ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.

திருமதி மு. சந்திரபிரபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்தும் மறையாமலும், மக்கள் மனதில் நீங்காமல் நிலைத்திருந்து, வங்கக் கடலோரம் துயில் கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா என்னும் தெய்வத்தை முதற்கண் வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாசியோடு தமிழ்நாட்டு மக்களுக்கு அல்லும், பகலும் அயராது உழைத்து, ஒவ்வொரு நாளும் நல்ல பல திட்டங்களை வாரி வழங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் முதற்கண் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன். எங்களுடைய மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் 1 அரசு மேல்நிலைப் பள்ளி, 5 அரசு உதவிபெறும் மேல்நிலைப் பள்ளிகள், 3 நகராட்சி நடுநிலைப் பள்ளிகள் ஆகியவை அமைந்துள்ளன. வெளியூர்களிலிருந்து வந்து ஏராளமான மாணவியர்கள் கல்வி கற்கின்றனர். மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியாக ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைத்து உதவிடுமாறு

2018 ஜூலை 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் 47 விடுதிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்விடுதிகளுக்கு ஒப்பளிக்கப்பட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை 2,905 ஆகும். விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் 4 பள்ளி விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றில் 3 பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதிகள், வன்னியன்பட்டி, பிள்ளையார்நத்தம் மற்றும் அம்மாபட்டி ஆகிய இடங்களிலும், ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி வன்னியன்பட்டியிலும் செயல்பட்டு வருகின்றன. இவை தவிர, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் ஆதி திராவிடர் நலத் துறை கட்டுப்பாட்டின்கீழ், மொத்தம் 10 விடுதிகள் உள்ளன. பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல மாணவ, மாணவியர்கள் அவ்விடுதிகளில் சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர்.*

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் மொத்தம் 6 பள்ளிகள் இயங்கி வருகின்றன. அவற்றில், 5 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் ஒரு உயர்நிலைப் பள்ளி அடங்கும். அப்பள்ளிகளில் பயிலும் பெரும்பாலான மாணவியர் நகராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த மாணவியர் ஆவார்கள். அவர்கள் விடுதிகளில் தங்கிப் பயிலும் வாய்ப்புகள் மிகக் குறைவு என்பதால் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதி துவங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா அவர்கள்.*

திருமதி மு. சந்திரபிரபா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் வெளியூரிலிருந்து வந்து பள்ளி மாணவியர் படிக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, அவர்கள் தங்கிப் படிக்க ஏதுவாக ஒரு பிற்படுத்தப்பட்டோர் மாணவியர்*

[2018 ஜூலை 3

விடுதி அமைத்து உதவிட வேண்டும். அதுமட்டுமல்லாமல், ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதியில் இரண்டு தனியார் கல்லூரிகள் இயங்கி வருகின்றன. கல்லூரி மாணவர்கள் தங்கிப் படிப்பதற்கு வசதியாக ஸ்ரீவில்லிபுத்தூரில் அரசுக் கல்லூரி மாணவர்கள் விடுதி ஒன்று அமைத்து உதவிடுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி சீ. வளர்மதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி அமைப்பது குறித்து, விருதுநகர் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அலுவலர்களிடமிருந்து உரிய கருத்துருவினைப் பெற்று, ஆய்வு செய்து, தேவையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, நிதிநிலைமைக்கேற்ப பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. விதி 110-ன்கீழ் அறிக்கைகள்

(அ) சார்–பதிவாளர் அலுவலகங்களுக்கு நவீன வசதியுடன்கூடிய கட்டடங்கள் கட்டுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)*